# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.2-)**

**அசல் வழக்கு எண். 113/2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.விஜய் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | ஆண்டிச்சாமி | கிராமம் | சுல்தான்பேட்டை |
| பணி | உதவி பொறியாளர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.shanthi Assistant on 10.09.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவேன். நான் சுல்தான்பேட்டையில் உதவி பொறியாளராக பணியாற்றி வருகிறேன். நான், வாதியின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு சொத்து விவரம் தெரியுமா என்றால் PAP திட்டத்திற்கு உட்பட்ட பாசனப்பரப்பு தெரியும். 26.07.2024 அன்று 1ம் பிரதிவாதி முறைகேடாக பைப்லைன் அமைத்ததாக எனக்கு புகார் வந்தது என்றால் சரிதான். 06.08.2025 தேதியில் 1ம் பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். **06.08.2025 தேதியிட்ட உதவி செயற்பொறியாளர் அறிவிப்பு சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. மேற்படி அறிவிப்பில் 7 தினங்களுக்குள் பைப்லைன் அகற்றி கொள்ள வேண்டும் என உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 7 தினங்களுக்குள் பைப்லைன் அகற்றப்பட்டதா என பார்த்தேனா என்றால் ஆமாம். ஆனால் அவர்கள் அகற்றவில்லை. நான் ஆயக்கட்டு வரைபடம் மற்றும் பாசனப்பரப்பு தாக்கல் செய்கிறேன். **ஆயக்கட்டு வரைபடம் மற்றும் அதன் பாசனப்பரப்பு (உண்மை நகல்) சா.சா.ஆ.2 மற்றும் சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பாசனத்தின் வாய்க்காலை சேதப்படுத்தினாலோ எங்களது அலுவலக அனுமதியின்றி பைப்லைன் அமைத்திருந்தால் அதை அகற்றி கொள்ள அறிவுறுத்த அதிகாரம் உள்ளது என்றால்

PAP பிரதான வாய்க்காலில் பைப்லைன் அமைத்திருந்தால் அதை அகற்றி கொள்ள அறிவுறுத்த அதிகாரம் உள்ளது. நிலவியல் வாய்க்காலில் உள்ள பைப்லைனை அகற்ற சொல்ல வருவாய் துறையினருக்கு தான் அதிகாரம் உள்ளது.

3. நிலவியல் வாய்க்கால் என்பது பட்டா பூமியில் செல்லும் வாய்க்கால் ஆகும். நிலவியல் வாய்க்காலில் தண்ணீர் வரவில்லை என புகார் வரும்போது, என்ன நடவடிக்கை மேற்கொள்வோம் என்றால் பாசன சங்க தலைவர் மூலமாக நேரடியாக சென்று இடத்தை பார்ப்போம். ஆட்சேபணை தெரிவிப்பவர்களிடம் ஆட்சேபணை செய்யக்கூடாது என சொல்வோம். அவ்வாறு சொல்லியும் ஆட்சேபணை செய்தால் வருவாய் துறையினரிடம் அது சம்மந்தமாக முறையீடு செய்வோம். 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு சம்மந்தமாக மேற்கண்ட நடைமுறையை பின்பற்றினோமா என்றால் அதற்குள்ளாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது, வழக்கு தீர்ப்பின் படி பின்பற்றி கொள்ளலாம் என உள்ளோம்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அசல் பதிவேட்டை கொண்டு வரவில்லை என்றால் சரிதான். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள படி உண்மை ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நீதிமன்ற உத்தரவின் பேரில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இந்த வழக்கில் நான் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கில் 30.01.2025 தேதியில் அரசு வழக்கறிஞர் மூலம் ஆஜரானேன். இந்த வழக்கில் ஆஜரான பின்னிட்டு 1ம் பிரதிவாதிக்கு 06.08.2025 தேதியில் சா.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் நான் மேற்படி விவரங்களை சொல்லவில்லை என்றால் விதிமுறைகளை சொல்லவில்லை. TAMILNADU FARMERS MANAGEMENT OF IRRIGATION SYSTEMS ACT, 2000(7/2001)ன் படி நாங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்றால் சரிதான். கீழ் SETTLEMENT OF DISPUTE குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அதன்படி பிரச்சனைக்குரிய தரப்பினர்களை அழைத்து விசாரிப்போம் என்றால் பாசன தலைவர் முன்பாக அழைத்து விசாரிப்போம். அந்த விசாரனையில் புகார் தாரருக்கு தீர்வு கிடைக்கவில்லையெனில், பிரிவு 37 ன் கீழ்

மேல்முறையீடு செய்துகொள்ள வேண்டும் என்றால் சட்டப்பிரிவை பார்த்து தான் சொல்ல முடியும். சட்டப்பிரிவை படித்து பார்த்துவிட்டு பாசன சங்க தலைவர் மூலமாக பிரச்சனைக்கு தீர்வு காண முடியவில்லை என்றால் பகிர்மான குழு தலைவரிடம் சொல்ல முடியும், ஆனால் பாசன நீரை அதுவரை தடுக்க இயலாது என சாட்சியம் அளிக்கிறார்.

3. நான் சென்று பார்த்தபோது PAP வாய்க்காலில் தண்ணீர் சென்று கொண்டிருந்தது என்றால் 2026 பிப்ரவரி மாதத்தில் சென்று பார்த்தேன். அதில் முதல் முறை தண்ணீர் மட்டும் சென்றது 2 வதாக தண்ணீர் செல்லும்போது தடுத்துவிட்டனர். யார் தடுத்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதி தடுத்தார். 2026 ல் 1ம் பிரதிவாதி தடுத்ததாக சொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் அனுப்பவில்லை.

4. சா.சா.ஆ.1 அறிவிப்பில் எந்த தேதி, மாதம்,வருடத்தில் சென்று பார்த்தேன் என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 26.07.2024 அன்று வாதி புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றும், நான் உடனே சென்று தள ஆய்வு செய்ததற்கான குறிப்பு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அப்போது பாசன நீர் செல்லவில்லை அதனால் தடுத்தார்களா, இல்லையா என்று அறிய முடியவில்லை, அதனால் அடுத்த முறை தண்ணீர் ஜனவரி 2026 அன்று திறக்கப்படும், அதன் பின்னிட்டு தண்ணீர் விடுகிறார்களா, இல்லையா என்று பார்த்துகொள்ளலாம் என இருந்தேன்.

5. 06.08.2025 அன்று சா.சா.ஆ.1 அறிவிப்பு கொடுக்கும்போது தண்ணீர் வரவில்லை என்றால் ஆமாம். மேற்படி அறிவிப்பில் PAP வாய்க்காலை 1ம் பிரதிவாதி அடைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.1 அறிவிப்பில் கண்டுள்ள வாய்க்கால் பிரதான வாய்க்கால் ஆகும். அது நீர்வளத்துறைக்கு சொந்தமான வாய்க்கால் ஆகும். எனவே, அதில் அமைத்துள்ள பைப்லைனை அகற்ற சொல்லி அறிவிப்பு அனுப்பப்பட்டது. சா.சாஆ.1 அறிவிப்பில் கண்டவாறு தள ஆய்வு செய்தபோது பாசன சங்க தலைவரை அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. தலைவர் வந்திருந்தார். தள ஆய்வுக்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு

அனுப்பப்பட்டதற்கான குறிப்பு எதுவும் சா.சா.ஆ.1 அறிவிப்பில் இல்லை என்றால் சரிதான்.

6. பாசனசங்க தலைவர் முன்பாக தள ஆய்வு செய்யப்பட்டது என்பதற்கான குறிப்பு இல்லை என்றால் சரிதான். TAMILNADU FARMERS MANAGEMENT OF IRRIGATION SYSTEMS ACT, பிரிவு 22(g) ன் படி ஆக்கிரமிப்பு இருந்தால் அதை அகற்றும் பரிகாரம் வழங்க சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும், WATER USERS ASSOCIATION க்கு தான் அதிகாரம் உள்ளது என்றால் நீர்வளத்துறை க்குசொந்தமான வாய்க்காலாக இருந்தால் அது வருவாய்துறையினர் மூலமாக ஆக்கிரமிப்பை அகற்ற முடியும். நீர்வளத்துறைக்கு சொந்தமான நிலவியல் வாய்க்காலாக இருக்கும்போது வருவாய்துறையினரை அணுகி தீர்வு காண முடியும். எங்களிடம் உள்ள புகார் சம்மந்தமாக நாங்களோ, வருவாய்துறையினரோ இதுவரை இறுதியான உத்தரவு பிறப்பிக்கவில்லை என்றால் நீர்வளத்துறையினரால் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை. வருவாய் துறையினர் பற்றி தெரியாது. 30.01.2025 அன்று வழக்கில் ஆஜராகிவிட்டு , 06.08.2025 கொடுத்த அறிவிப்பில் தள ஆய்வின் போது அருகில் இருந்த நில உரிமையாளரிடம் கேட்டறிந்து கண்டறியப்பட்டது என சொல்லியுள்ளேன் என்றும், எனவே, தள ஆய்விற்கு செல்லவில்லை என்றும், வாதிக்கு ஆதரவாக அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எங்களுடைய அதிகாரமானது பிரதான வாய்க்காலுடன் முடிந்துவிடுகிறது. நிலவியல் வாய்க்காலில் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct
Sd./M.Santhosham
District Munsif, Sulur